DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Cr.P.C/XXV BNSS)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, KUMBAKONAM

| | | |
|---|---|---|
| Case No. | : | STC No. 2216 /2019 |
| Deposition of witness | : | DW-2 |
| Name | : | பூமிநாதன் |
| Father's /Husband Name | : | பன்னீர்செல்வம் |
| Village | : | திருவிடைமருதூர் |
| Taluk | : | திருவிடைமருதூர் |
| Age | : | 41 |
| Occupation | : | ஆட்டோ டிரைவர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 14th day August 2024.
Complainant and Accused present.

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்:–**

புகார்தாரர் தாக்கல் செய்துள்ள வழக்கு விவரம் தெரியும். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக புகார்தாரர் அனுப்பிய சட்ட அறிவிப்பு பற்றி தெரியுமா என்றால் தெரியும். அதற்கு எதிரி மறுப்பு தெரிவிக்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. பதில் அனுப்பப்பட்டதா என்று எனது அப்பா என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். 10 பைசா வட்டிக்கு பணம் வாங்குவது தொடர்பாக எனது அப்பா காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். Hero Hond Splendor வண்டியை எனது அப்பாவிடமிருந்து புகார்தாரர் பிடுங்கியதாக சொல்லப்பட்டது சம்பந்தமாக எனது அப்பா காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி வட்டி மற்றும் வண்டி தொர்பாக நீதிமன்றத்தில் வாக்கு தொடரவில்லை என்றால் சரிதான். பு.சா.ஆ.1 காசோலையில் உள்ள கையொப்பம் எனது அப்பா கையொப்பமா என்றால் இல்லை. எனது அப்பா காசோலையில் உள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல என்று அறிவிப்போ அல்லது நீதிமன்றத்தில் சொல்லவில்லை என்றால் எனக்கு தெரியாது. காசோலையில் உள்ள கையொப்பம் போலி கையொப்பம் என கூறி நானோ, எனது அப்பாவோ காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான், காசோலையை தற்போதுதான் நான் பார்க்கிறேன். காசோலையை பார்க்காமல் 06.03.2024 தேதியிட்ட எனது பிரமான வாக்குமூலத்தில் காசோலையில் உள்ள கையொப்பம் எனது அப்பாவுடையது அல்ல என கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனது அப்பா வாங்கிய கடனை கொடுக்கக்கூடாது என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd./- M. Elavarasi,
Judicial Magistrate No.I, Kumbakonam.